பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 23 | 08-09-94 | வியாழக்கிழமை | ஓசை 202

## பேராசிரியர் துரைராசாவிற்கு விஞ்ஞான கலாநிதிப் பட்டம்

யாழ். பல்கலைக் கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழாவில் 642 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இதில் மறைந்த பேராசிரியர் அ. துரைராசாவிற்கு விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது. இதன்படி 161 மாணவர்களுக்கு கலைமாணியும், 35 மாணவர்களுக்கு தொழில் நிர்வாக மாணியும், 75 மாணவர்களுக்கு வர்த்தக மாணியும், 58 மாணவர்களுக்கு மருத்துவ சத்திர சிகிச்சை மாணியும், 25 மாணவர்களுக்கு சங்கீத டிப்ளோமாவும், (6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச லயனல் பேர்னாண்டோ அரசாங்க தரப்பு பிரதிநிதியாக நியமனம்!

சீரான போக்குவரத்து ஏற்படும்வரை

## அரசின் கட்டுப்பாட்டு விலையில் பொருள் விநியோகிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

சீரான பாதை ஊடாக யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருட்கள் எடுத்துவரப்படுவதனால் அல்லது கப்பல் கட்டணம் அற்ற நிலையில் கடல் மார்க்கமாக பொருள்கள் எடுத்துவரப்படுவதனால் மட்டுமே யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விநியோகம் செய்ய முடியும் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது புதிய அரசாங்கத்தினால் பல பொருள்கள் மீதான தடை தளர்த்தப்பட்டுள்ளது, இதனால் யாழ். குடாநாட்டில் இப்பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

சீரான பாதை திறக்கப்படாத பட்சத்தில் இப்பொருள்களை கப்பல் மூலம்தான் யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவரமுடியும் நிவாரணம் தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கு சிறிலங்கா அரசு அதிக (6ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

### புதிய அரசிடம் புனர்வாழ்வுப் பிரிவு விடுத்தது

(யாழ்ப்பாணம்)

யுத்த நடவடிக்கையினால் பாதிப்படைந்தவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை பட்டதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு, நிவாரணம் பெற முடியாத நிலையில் பல குடும்பங்கள் தவிக்கின்றன.

க்கு நிவாரணம் வழங்க புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு

வீரச்சாவு



கப்டன் பாரதி



## விரைவில் யாழ். அனுப்பப்படலாம்

(கொழும்பு)

தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளரும் 'லேக்ஹவுஸ்' பத்திரிகையின் பணிப்பாளருமான லயனல் பேர்னாண்டோவை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பப் பேச்சுகள் நடத்துவதற்கான அரசதரப்பு பிரதிநிதியாக அரசாங்கம் நியமித்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்த இவர் விரைவில் யாழ்ப்பாணம் அனுப்பப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள பி பி ஸி விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களுக்கு வழிசெய்ய தகவல் துறை அமைச்சின் செயலாளரும் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருமான லயனல் பேர்னாண்டோவை அரசு நியமித்துள்ளது எனத் தெரிவித்தது

மேலும் பேச்சுகளை ஆரம்பிக்க இவர் விரைவில் யாழ்ப்பாணம் செல்வார் எனவும் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு தாம் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் செய்தி அனுப்பியதாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனக் குறிப்பிட்டது.

பேச்சுக்காக விடுதலைப் புலிகளும் தமது பிரதிநிதியை நியமிக்கவேண்டும் என கேட்டு தாம் பதில் எழுதப்போவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்

இதேவேளை இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள ஏ எப் பி செய்தி ஸ்தாபனம் முன்னாள் யாழ் அரசாங்க அதிபரும் தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளருமான லயனல் பேர்னாண்டோ நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளதாகக் குறிப்பிட்டது

விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கும் (6ஆம் பக்கம் பார்க்க)

## லயனல் பேர்னான்டோ குறித்து

(யாழ்ப்பாணம்)

யுத்த நடவடிக்கையினால் பாதிப்படைந்தவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் எனக்கோரி யாழ்-செயலகம் புனர்வாழ்வு அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளது

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளில் யாழ். மாவட்டத்தில் பலர் இறந்தும் ஊனமுற்றும் உள்ளனர். இவர்களது குடும்ப நிலை வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ளது.

1993 நவம்பர் 4-ம் திகதி வரையும் அரசாங்கத்தினால் இவர்களுக்கான நிவாரணப் பணம் வழங்கப்பட்டுவந்தது திடீர் என்று இது நிறுத்தப்பட்டதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு, நிவாரணம் பெற முடியாத நிலையில் பல குடும்பங்கள் தவிக்கின்றன.

திரும்ப இக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (தி)(பா)

யாழ் செயலகத்திற்கு

## தடை நீக்கப்பட்ட பொருள்கள் சுற்றறிக்கை

தடை நீக்கப்பட்ட பொருள்களின் பெயர்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத்தலைமையக அதிகாரியான என் குணதிலகவின் கையெழுத்துடனான இந்த சுற்றறிக்கையில் எதுவித இடையூறுகளும் இல்லாமல் இப்பட்டியலில் உள்ள பொருள்களை எடுத்துச் செல்வதற்கு நாம் அனுமதி வழங்குகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட இச் சுற்றறிக்கை யாழ் புனர்வாழ்வுப் பகுதியினரிடம் நேற்று முன்தினம்கிடைக்கப்பெற்றது

வடக்கில் உள்ள சகல அரச செயலகங்களுக்கும் இச்சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (தி, பா)

## வவுனியாவில் மோதல் சிப்பாய்பலி நால்வர்காயம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் ஒரு சிப்பாய் பலியானதாகவும் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியாவில் மேற்படி மோதல் நடைபெற்றதாகவும் அவ் வட்டாரம் மேலும் தெரிவித்தது.

# திருமலையில்மக்கள்மீது துன்புறுத்தல் முகாமிட்ட ராணுவம் வெறியாட்டம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் இலங்கைத்துறை முகத்துவாரத்தை வந்தடைந்து முகாமிட்ட சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களை கைதுசெய்து மிகவும் கொடூரமான முறையில் அடித்துக் கொடுமைப்படுத்தியதுடன் வீடொன்றையும் எரித்து சாம்பராக்கியுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி காலை ஆறுமணியளவில் திருகோணமலை பட்டியடி, ஈச்சிலம்பற்றை முகாம்களிலிருந்து வெளியேறி இலங்கைத் துறைமுகத் துவாரத்தை வந்தடைந்த இராணுவத்தினரே இக்கொடூரச் செயலில் ஈடுபட்டனர்.

இவர்கள் இப்பகுதியில் வசித்த 25 ற்கு மேற்பட்ட பொதுமக்களையே இவ்வாறு அடித்துக் கொடுமைப்படுத்தினர்.

இதேவேளை சீனன்வெளியிலுள்ள கரைவலை வாடியையும் உப்பூறலிலுள்ள வீடு ஒன்றையும் எரித்து அழித்த பின் ஆறாம் திகதி முகாம் திரும்பினர்.

## 139 பட்டதாரிகளுக்கு நியமனம் கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

கொள்கை திட்டமிடல் செயற்படுத்தல்அமைச்சினால் ஆசிரிய நியமனங்களுக்காக யாழ்ப்பாணச் செயலக திட்டமிடல் பணிமனையில் நேர்முகப் பரீட்சையில் தோற்றிய பட்டதாரிகளில் மேலும் 135 பேருக்கு ஆசிரியர் நியமனங்களும், 4 பட்டதாரிகளுக்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபையிலும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)



வீரவேங்கை திலக்

மட்டக்களப்பு மாவட்டம் ஆண்டான்குளப் பிரதேசத்தின் வண்ணா எலுமிச்சைக் குளம் எனுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# லயனல் பெர்னாண்டோ குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை

### மக்கள் தொடர்பு அதிகாரி நியால் விஜேநாயகார

[கொழும்பு]

தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளர் லயனல் பர்னாண்டோவை யாழ்ப்பாணம் அனுப்புவது குறித்து இன்னும் முடிவுசெய்யவில்லை என்றும் இது தொடர்பாக நேற்றும் பிரதமருக்கும் செயலாளருக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும் தகவல் சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரி நியால் விஜேநாயகார தெரிவித்துள்ளார்

இது குறித்து இன்னும் இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை என்றும் ஆனால் அரசாங்க தரப்பினர் இவரை அனுப்புவதிலேயே அதிக நாட்டம்கொண்டு காணப்படுவது உண்மையே என மேலும் அவர் தெரிவித்துள்ளார்

## புலிகள் தரப்பிலும் பிரதிநிதிகள் தேவையாம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தைக்கு தயார் என்ற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செய்திக்கு பதிலளித்துள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த போராளிகள் சார்பிலிருந்து பேச்சுகளில் கலந்து கொள்ளவுள்ள பிரதிநிதியின் பெயரை பிரபாகரன் அறிவிக்க வேண்டும் என அரசு கேட்கும் என குறிப்பிட்டுள்ளார்-

(6 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிற்கு பாதை திறப்பதில் அரசு அக்கறையாய் உள்ளது

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டுக்கு தடை நீக்கப்பட்ட பொருள்கள் தாராளமாக தங்கு தடையின்றிச் செல்வதை உறுதிப்படுத்தும் முகமாக, சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையையோ, அல்லது ஆனையிறவுப் பாதையையோ திறப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். வவுனியா இராணுவ முகாமில் கடந்த ஞாயிறன்று பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வடபகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையும் ஓரளவு தீர்க்கப்படு மன்றும் அவர் கூறியுள்ளார்.

(6ஆம் பக்சம் பார்க்க)

# சுன்னாகம் மின்நிலையத்தை இயக்க பிரதமருக்கு ஆலோசனை கூறினேன்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நான் பிரதமருடன் உரையாடிய போது அவர் மின்சாரத்தை மீண்டும் வடக்கிற்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக எனக்கு கூறினார். இப்போதுள்ள நிலையில் உடனடியாக மின்சாரத்தை பெறுவது கடினம். வவுனியாவிலிருந்து யாழ்வரை மின்சாரம் கொண்டுவருவதாயின் பல காலதாமதம் இருக்கும் என நான் கூறினேன். இவ்வாறு யாழ். அரச அதிபர் சிறிலங்கா வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சுன்னாகம் மின்நிலையத்தை உடனடியாக இயக்கச் செய்வதன் மூலம் தாமதத்தை தவிர்க்கலாம் என நான் பிரதமருக்கு சுட்டிக்காட்டினேன்.

அதற்கு அவர் சுன்னாகம் மின்நிலையம் எவ்வளவு தூரத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது என என்னிடம் கேட்டார். அங்கு பணியாற்றிய பொறுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டு பூங்கா சனிவரை மூடப்படும்

கேணல் கிட்டு நினைவுச் சிறுவர் பூங்கா பசுமைபேணும் நோக்குடன் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றது.

இதனால் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை பூங்கா மூடப்பட்டிருக்கும் என கேணல் கிட்டு சிறுவர் பூங்கா பொறுப்பாளர் அறிவித்துள்ளார்-

## சனியன்று பட்டமளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 14-வது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி மூன்று அமர்வுகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

[6ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**புரோயிலர் குஞ்சுகள் விற்பனை**

**PRIMA BROILER** பிறிமா புரோயிலர் ஐந்துநாள்கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (9296)

**தவறிவிட்டது**

4-9-94 அன்று கிளாலிக்கும், கொடிகாமத்திற்குமிடையில் அடையாள அட்டைகள் (3) கடவுச்சீட்டு (3) காதுகேட்கும் கருவி அடங்கிய சிவப்பு நிற கைப்பை தவறிவிட்டது அ. அ. இல - 402270080V - 476624690V - 245703325V கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (9314)

**ஆனந்தம் தயாரிப்புக்கள்**

சத்-சித் ஆனந்தம் - சத்தாக இருக்கும் உண்மை பொருளை எமது சித்தத்தால் அறிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதே போல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம். பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள் கேட்டு வாங்குங்கள் ஆனந்தம். (சி/10289)

**நினைத்தாலே இனிக்கும்**

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம் சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்பு வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம் (9327)


# தடுப்புக்காவலில் உள்ளோர் விடுதலைக்கு நடவடிக்கை

## நீதி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்டகாலமாக பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைபற்றி மேலதிக நடவடிக்கைகளுக்காக, ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐவர் கொண்ட இக்குழு தனது பணியை முடிப்பதற்கு 3 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 600 பேர் வரை எவ்வித விசாரணைகளுமின்றி காவலில் வைக்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர்இலாகா தெரிவித்துள்ளது. ஆனால் இத்தொகை கூடுதலாகவும் இருக்கலாம். தண்டனையை அனுபவித்து முடித்த சிலர் தொடர்ந்தும் காவலிலுள்ளனர் இவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர். வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காவலிலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(தொல்புரம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு வ. அ. வரதராசா தலைமையில் நடைபெறும் (41)

## நியமனக் கடிதங்கள்

நல்லூர் கோட்ட பயிலுநர் உதவிஆசியர்களுக்குமாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நிரந்தர நியமனக் கடிதங்கள் நாளை வெள்ளி பி.ப. 2.00 மணிக்கு கோட்டப் பணிமனையில் வைத்து வழங்கப்படும். உரிய ஆசிரியர்களை வந்து பெற்றுக்கொள்ளுமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## ''அறிவாயுதம்'' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் வைகலின் குழுவினரால் ''அறிவாயுதம்'' நூல் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந் நூல் இரண்டு மாதங்களிற்கு ஒருமுறை வெளியிடப்படவுள்ளது. (88)


## 3-ம் ஆண்டு நினைவு தினம்



**2-ம் லெப்டினன்ட் சலுஜா**

**கணபதிப்பிள்ளை ரதீஸ்வரி**

| தாயின் மடியில் | மணலாறு மண்ணில் |
|---|---|
| 30 - 04 - 1971 | 08 : 09 - 1991 |

நீங்காத உன்நினைவை மீட்டியே பார்க்கின்றோம்
வாடாத உன்முகத்தை சோராது தேடுகின்றோம்.
துள்ளும் நடையழகை எண்ணியே ஏங்குகின்றோம்
ரதி, ரதி என உன்பேர் சொல்லி, மூன்றாண்டாய்
கூப்பிட்டுப் பார்க்கின்றோம் இன்னும் வரக் காணலியே

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்.

ரதீஸ்வரி வீதி.
அண்ணாசிலையடி,
கரணவாய்.

(9315)

## பயிற்சி வாய்ப்புக்கள்

அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சிகளில் பங்குகொள்ள விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

★ தையற் பயிற்சி நெறி (4 மாதம்)
(பகல் நேரம்)

★ தட்டச்சு யந்திரம் திருத்தம் (3 மாதம்)
(பகல் நேரம்)

★ நீரிறைக்கும் யந்திரம் திருத்தம் (4 மாதம்)
(மாலை நேரம்)

பயிற்சிகள் யாவும் அனுபவமும், திறமையுமிக்க விரிவுரையாளர்களால் அறவழி பயிலகத்தில் நடாத்தப்படும்,

**விண்ணப்ப முடிவு திகதி:- 20 - 09 - 1994**

சுய விபரமடங்கிய விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்,

NVDAG

செயலாளர்,
அறவழிப்
போராட்டக் குழு,
த. பெ. இல. 2
சாவகச்சேரி.
(9321)

## நினைவு கூருகின்றோம்...

**08 09. 1994**

1986 ம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சிறீலங்காப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**காந்தன்** (வேலாயுதம்பிள்ளை உதயகுமார் - கல்வியங்காடு - யாழ்)

**ஜேம்ஸ்** (குணரட்ணம் சிவமோகன் - விநாயக முதலியார் தெரு - பருத்தித்துறை)

யாழ் - கோட்டை காவலரண் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**ராஜன்** (ஜேம்ஸ் உதயபிரசாத் - 31, மவுண்கார் மேல் வீதி, குருநகர் - யாழ்)

**நந்தன்** (சந்தசாமி நந்தகுமார் - கந்தர்மடம் யாழ்.)

**ரமேஸ்** (தங்கவேலாயுதம் ரமேஸ்குமார் - திருநெல்வேலி தெற்கு - யாழ்.)

1987 ம் ஆண்டு தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

1990 ம் ஆண்டு வசாவிளான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜெயா** (ம. ரவி - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

1991 ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ராணி** (சந்திரயோகினி செல்வநாயகம் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**பிலகரி** (இரத்தினேஸ்வரி சரவணமுத்து - உருத்திரபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் அக்கினோ** (கலைவாணி இராசரத்தினம் - கைதடி, நுணாவில் - சாவகச்சேரி)

**லெப். குணசீலி** (சிவராஜி தியாகராஜா - திருநெல்வேலி)

**லெப். மதுரா** (வடிவாம்பாள் பரமு - மீசாலை வடக்கு - சாவகச்சேரி)

**2 ம் லெப். சலுஜா** (ரதீஸ்வரி கணபதிப்பிள்ளை - கரணவாய், சரவெட்டி - யாழ்)

**பரிமளா** (சந்திரபவானி கந்தசாமி - திருநெல்வேலி - யாழ்.)

**கல்பனா** (அருள்நிதி கனகரட்ணம் - அல்வாய் தெற்கு, கரவெட்டி - யாழ்.)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10287)


**நன்னீர் மீன்பிடி அதிகரிப்பு**

(மட்டக்களப்பு)

கிழக்கில் நன்னீர் மீன்பிடி உற்பத்தி அதிகரித்துள்ளது; உரகாமம், இடாரம் போட்டமடு, கொக்குக்குஞ்சுமடு, இத்துள் குளம், சுங்காவில், தம்...


## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

1970. 5. 20

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

மடு, கொக்குக்குஞ்சுமடு, இத்துள் குளம், சுங்காவில், தம்பாளை, கட்டுவன்வில போன்ற குளங்கள் நன்னீர் மீன் வளர்ப்புக்கு உபயோகிக்கப் படுகின்றன.

கடந்த சில மாதங்களாக, மழையின்மையால் குளங்களின் நீர்மட்டம் குறைந்துள்ளதும், இவ்வாறு கூடியளவு மீன் பிடிபடுவதற்கு காரணம் என அப்பிரதேச வாசிகள் கூறியுள்ளனர்.

## பார்மசி பயிற்சி வகுப்பு இலவசம்

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிகர் சழகத்தினால் இலவசபார்மசிபயிற்சி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன. க. பொ. த. (சாதாரணம்) சித்தியெய்தியவர்களாகவும் ஆங்கிலம், விஞ்ஞானம் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் எனவும் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (41)



தாயக மண்ணில்

1986. 9. 8

## வீரவேங்கை நந்தன்

(கந்தசாமி நந்தகுமார்)

தேசத்தின் விடிவிளக்கை
ஏற்றிடவே தென்றலில்
தவழ்ந்து வரும் முத்துக்களே
நீங்கள் வித்துக்களாகி
கல்லறை நோக்கி விரைகிறீர்
நாங்கள் கல்லறைக்கு விளக்கேற்றி வணங்குவோம்

விடுதலைக்காய் வித்திட்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்

182, நந்தன் வீதி,
கந்தர்மடம். (9322)

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பவவருடம் ஆவணி மாதம் 24 ம் திகதி [9-9-94] வெள்ளிக் கிழமை காலை 8-28 மணி முதல் 10-50 மணி வரை உள்ள சுபவேளையில் எமது ஏகபுத்திரி திருநிறைச்செல்வி றிஜிதா அவர்களுக்கு பூப்புனித நீராட்ட நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் நண்பர்களையும், உறவினர்களையும் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி V.S தங்கராசா
முருகமூர்த்தி வீதி

ராஜ் ஸ்ரோர்ஸ்
கேசாவில் வீதி,
வண். வட மேற்கு

(9324)



## கப்டன் அக்கினோ

(செல்வி கலைவாணி இராசரத்தினம்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 26.07.1968 | 08.09.1991 |

பாசமுள்ள கலைவாணி
பண்புபல மிக்குயர்ந்தோய்
நேசமிகும் மண்மீட்பில்
நினதுயிரை நீத்ததனால்
மாசிலுயர் காவியத்தை
மாண்புடனே படைத்திட்டாய்
பாசத்தால் உடலம் நொந்து
பகலவன் முன் மெழுகாய் நிற்கின்றோம்
நேசமுடன் மண்மீட்பில் நின்று
நினதுயிரை நீத்த நங்காய்
மாசற்ற தமிழீழம் இங்கே
மலர்வதனை மகிழ்ந்து பாரீர்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

'கலா பவனம்'
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி. (9329)

- குடும்பத்தினர்

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 - 12 - 1915 | 08 - 09 - 1990 |

### அமரர் திரு. அ. அ. பேதுருப்பிள்ளை

(வியாபாரியார்) அவர்கள் மயிலிட்டி

"பிறப்புக்குப் பின்னால் வழி நடத்திய இறைவன் இறப்புக்குப் பின்னால் உம்மைத் தம்முடன் இணைப்பார்"

மண்ணில் மனம்மகிழ மக்கள் எமையணைத்து
கண்ணின் மணிபோல காத்து நின்றாய்
விண்ணின் பதியைநீர் விரைந்து சென்று
ஆண்டு நான்கானாலும் ஆறாது எம்துயரம்

நாட்டினி லுற்ற நலமிலா நிலையால்
வீட்டை விட்டு நின்மக்கள் விலகியே
வாட்டமுடன் வாழுகின்றோம் வளமாக மீண்டும்
கூட்டமாய் சேர்ந்திடும்நாள் கூடாதோ ஐயா!

முறைமையுடன் காத்த மக்கள் மருமக்கள்
நிறைவான பேரர்கள் நித்தம் நினைக்கின்றோம்
இறையடியில் இணைந்திட்ட உங்கள் ஆன்மா,
குறைவின்றி என்றென்றும் வாழ்க! வாழ்க!

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை!

குணம் கிறீம் கவுஸ் (குளிர்களி அகம்)
KUNAM CREAM HOUSE
49, காங்கேசன் துறைசாலை
சுன்னாகம்

(சி-10291)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

# இந்திய - சிறிலங்கா ஒப்பந்த அமுலாக்கம்; முதலில் பின்வாங்கியது சிறிலங்கா அரசே!

## இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் டிக்சிட்

(கொழும்பு)

தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கையின் அரசு தவறிவிட்டது இலங்கையில் நிகழும் அனர்த்தங்களுக்கும், வன்முறைச் சம்பவங்களுக்கும் இது தான் அடிப்படை. இலங்கையின் உள்நாட்டு விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவிப்பதில் இருக்கும் தயக்கத்துடன் இதனைக் கூறுகின்றேன் இவ்வாறு இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவரும், இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான ஜே என் டிக்சிட் கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே லீடர் பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி என்ற வகையில் கொள்கை முடிவு எடுப்பதில் சம்பந்தப்படவில்லை. நிலைமைகளை அவதானிப்பதிலும் முடிவுகள் அமுல் படுத்துவதில் கண்காணிப்பு செய்வதும், பொருத்தமான மாற்று வழிகளை சிபார்சு செய்வதும் தான் வெளியுறவு சேவையில் தூதுவர் ஒருவரின் பணியாக உள்ளது. 1985ல் கொழும்பிற்கான தூதுவராக நியமனம் பெற்றபோது ஐக்கியப்பட்ட-ஜனநாயக ரீதியான-பல் லினங்களைக் கொண்ட-இலங்கையில் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான வகையில் செயற்படும்படியே எனக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையிலேயே நான் செயற்பட்டேன் எனத் தெரிவித்தார்.

இப் பேட்டியில்,

ஒப்பந்தத்தின் சரத்துக்கள் அமுல்படுத்தப்படுவதில் அரசும், தீவிரவாதிகளும் தத்தம் கடமைப்பாடுகளிலிருந்து பின்வாங்கினர் எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள். இதில் எங்கே தவறு நேர்ந்தது எனக் கருதுகிறீர்கள்?

புன்னகையுடன் பேசத் தொடங்கிய அவர் இதுபற்றி பேசப் புகுந்தால் ஒரு நாளில் அரைப் பகுதிக்கு மேல் பேச வேண்டியிருக்கும், 1987இன் செப்ரம்பர் இறுதிப் பகுதியிலும் அக்டோபர் முற்பகுதியிலும் இரு தரப்பினருக்கும் இடையே 'செய்தி இடைவெளிகளும்' தத்தம் பங்கிலிருந்து பின் வாங்குதல்களும் அதிகரித்த வண்ணம் இருந்தன. அந்த நேரத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் விருப்புக்குரியவனாக நான் இருக்கவில்லை ஒப்பந்தத்தின் அமுலாக்கலில் முதலில் பின்வாங்கியது சிறிலங்கா அரசாங்கமே. தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்குவதில் அவர்கள் தாமதங்களை வேண்டுமென்றே மேற்கொண்டனர். நிதி விடயத்தில் அதிகார பரவலாக்கம் செய்வதில் தாமதம் செய்தனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும் ஏனையோரும் 1983 ஆம் ஆண்டின் நிலை மீளத் திரும்புவதாகவும், சர்வகட்சி மாநாட்டுக்கு நிகழ்ந்த கதி பற்றியும் எண்ணத் தலைப்பட்டனர்.

இத்தருணத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் 17பேர் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஜனாதிபதி ஜே. ஆரின் பணிப்புரை அமுல்படுத்தப்படுவதை தவிர்க்கும் முகமாக கொழும்பிலிருந்து பலாலிக்கு விசேட விமானத்தை அனுப்பி வைத்தார். இந்தப் 17பேரையும் இந்தியப் படையின் பாதுகாப்பில் வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு ஜே. ஆர் என்னுடன் இணக்கம் தெரிவித்தார். ஆனால் 17பேரையும் கொழும்புக்கு கொண்டுவர சிறிலங்காப் படையினர் முயற்சித்ததை அடுத்து அவர்கள் சயனைட் அருந்தினர். இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு இயல்பாகவே சீற்றம் ஏற்பட்டது இவர்கள் இதனை ஒரு காட்டிக்கொடுப்பாகவே கருதினர்.

இதனால் தான் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் சிக்கல்கள் எழுந்தனா?,

நிச்சயமாக, ஜனாதிபதி ஜெயவர்த்தன சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தவே விரும்பினார் ஆனால் அவரது அமைச்சர்களிடமிருந்து அவர் பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கியிருந்தார். காமினி ஜயசூரிய, லலித் அத்துலத்முதலி, பிரேமதாசா போன்றோர் ஒப்பந்தம் குறித்து முழுமையாக எதிர்த்தனர் என்றார்.

உங்கள் நீண்ட அனுபவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பிரதான ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைவார்கள் எனக் கருதுகிறீர்களா?

இது வரையிலான சம்பவங்களின் அடிப்படையில் பார்க்கும் போது விடுதலைப் புலிகள் தான் இப்பிரச்சினையின் மையப்புள்ளிகள். அவர்கள் ஜனநாயக வழியில் இணைகின்றார்களோ இல்லையோ என்பது சிறிலங்கா அரசாங்கத்தினதும், பெரும்பான்மை சிங்கள மக்களினதும் செயற்பாடுகளில் தான் தங்கியிருக்கிறது. தமிழர்களின் நியாயமான அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் தொடர்புடையது எனக் குறிப்பிட்டார்.

நீங்கள் கொழும்புக்கான தூதுவராக நியமனம் பெற்றது முதல், வெளியுறவுச் செயலாளராகி ஓய்வு பெற்றதுக்கு இடையிலான காலப் பகுதியிலான சம்பவங்களின் அடிப்படையில் சிறிலங்கா இந்தியா உறவுகள் எப்படியிருக்கிறது எனக்கருதுகிறீர்கள்?

நல்லது, உறுதியான பொதுவான நல்லெண்ண அடிப்படையிலான நல்லுறவு தான் நிலவுகின்றது, ஆனாலும் இனப்பிரச்சினை தொடர்பான ஒரு மயக்க நிலையும் தேக்க நிலையும் காணப்படுகின்றது தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு முழுமையாக காணப்படுவதே நல்லது.

இப் பிரச்சினையிலிருந்து இந்தியா ஒதுங்கிக் கொண்டு விட்டது என்பதை நான் கூறமுடியும். இப்பிரச்சினையில் இந்தியா இப்போது மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ ஆர்வத்துடன் இல்லை. நாங்கள் முயற்சித்ததும், அம்முயற்சி பயனளிக்கவில்லை என்பதும் தெரிந்ததே. எனினும் இனப் பிரச்சினை முழுமையாக சுமுகமாகத் தீர்க்கப்படும் வரையில் பொதுவான நல்லுறவும் பரந்த அடிப்படையிலான உறவும் இருந்தாலும் ஐயுறவுகளும் இருக்கத்தான் செய்யும்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் இனவாதப் பேச்சுக்கள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் பிரதிபலிப்புக்கள் எப்படியிருந்தது?

இது பற்றி நாங்கள் அக்கறை கொண்டிருந்தோம். எனினும் சிறிலங்காவின் உள் விவகாரத்தில் கருத்துக் கூற விரும்பவில்லை, இலங்கையர்கள் தான் இது பற்றி தீர்மானிக்க வேண்டும். இப்போது ஒரு தனிப்பட்ட பிரஜை என்ற வகையில் கருத்துக் கூறமுடியும். தமிழர்களின் அபிலாசைகளைப் புறக்கணித்து சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் போக்கு வளருவது இலங்கையின் ஐக்கியத்தைப் பாதிக்கும் இது பற்றி இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும்;

இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்திய அரசியல் அரங்கில் பயனுள்ளதாக அமைந்ததா?

இந்தியப்படையினர் தன்னிச்சையாக ஒரு தலைப்பட்சமாக அங்கு வரவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறிலங்கா ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே அவர்கள் சென்றனர் பிரேமதாசா வேண்டாம்என்றபோது அவர்கள் வெளியேறி விட்டனர். அத்துடன் கதை முடிந்தது இது பற்றி மேலும் எதுவும் கூறவிருப்பவில்லை.

சார்க் உடன்பாட்டின் கீழ் இந்திய துருப்புக்களை அனுப்பும்படி இலங்கை மீண்டும் கேட்குமாயின் என்ன நடக்கலாம்?

அத்தகைய தீர்மானம் அல்லது உடன்பாடு இல்லாத நிலையில் இக் கேள்விக்கே இடமில்லை இது உங்களுடைய பிரச்சினை நீங்கள் தீர்வு காண வேண்டிய பிரச்சினை

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரை நாடு கடத்தும்படி கோரிக்கை விடப்படும் சாத்தியம் இருக்கிறதா?

இது பற்றி எதுவும் எனக்குத் தெரியாது இது தொடர்பாக இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது எல்லா விதமான சட்ட ஏற்பாடுகளும் நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும்என்றே கருதுகிறேன்.

இந்தியப்படை மீண்டும் இலங்கைக்கு செல்லுமா?

எனக்குத்தெரியாது. ஆனால் குறுகிய எதிர்காலத்தில் அப்படி நடக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னால் அதற்கான சாத்தியப்பாட்டை எதிர் நோக்கவும் முடியவில்லை அவ்வாறு நிகழ வேண்டும் என்று வாதிடவும் விரும்பவில்லை. நீண்ட காலப் போக்கில் என்ன நடக்கும் என்பதைஎவர்தான் அறிவார்.

# இன அடிப்படையில் அமைச்சை பிரிக்கக்கூடாது

(கொழும்பு)

கலாசார அமைச்சு இன அடிப்படையில் பிரிக்கப்படக் கூடாது என்று இலங்கை சுதந்திர கலாசார அமைப்பு பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவிற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதமர் திருமதி சந்திரிகாவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள இவ் அமைப்பு 1977ம் ஆண்டுவரை கலாசார அமைச்சு ஒன்றாகவே இருந்தது அதன் பின்னர் இன அடிப்படையில் கலாசார அமைச்சு பிரிக்கப்பட்டது சிங்கள, இந்து முஸ்லிம் எனக் கலாசாரத்தை கூறு போடுவது மக்கள் நாட்டுக்குள் பிரிந்து இருக்கிறார்கள் எனக் காட்டுவதற்கே சர்வதேச ரீதியாக உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்களிக்கும் வாய்ப்பு தமிழர்களுக்கு மறுப்பு

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் அறுபதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வசித்தும். பலருக்கு இம்முறை பொதுத்தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

பலவருடங்களாக இவர்கள் இப்பகுதியில் வசித்திருந்தும், இவர்களது பெயர்கள் வாக்காளர்கள் இடாப்புகளில் பதியப்படாததனால் இந்நிலைஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்றமுறை வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த பல தமிழர்களின் பெயர்கள், இம்முறை வாக்காளர் இடாப்பிலிருந்து விடுபட்டுப் போயுள்ளதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் அமைச்சர் மகன் துப்பாக்கியால் சுட்டார்

## - பியந்த குமார கொலை வழக்கில் சாட்சி

(கொழும்பு)

அத்தனகலை தேர்தல் தொகுதியில் தேர்தல் காலங்களில் நடைபெற்ற வன்செயலின் போது அமைச்சர் போல் பெரேராவின் மகனே இறந்தவரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார் என நீதிமன்ற விசாரணையில் சாட்சியொருவர் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் பியந்த குமார கொலை தொடர்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையில் சாட்சி டி. ஜயசேகர மேற்படி சம்பவத்தை விபரித்துள்ளார்.

# கொழும்பில் பெண் கடத்தல் 3 தினங்கள் சித்திரவதை

(கொழும்பு)

கொழும்பில் இளம் பெண் ஒருவர் ஆமர் வீதியில் வைத்துக் கடத்தப்பட்டு கந்தானைப்பகுதியிலுள்ளவீடொன்றில் மூன்று தினங்களாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

பகல் வேளையில், ஆமர் வீதியிலிருந்து கடத்தப்பட்ட மாளிகாவத்தையை சேர்ந்த இப்பெண் தற்போது தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிசார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

## 3-ம் ஆண்டு நினைவேடு



# பிரதமர் சந்திரிகாவை

சும், தீவிரவாதிகளும் தத்தம் கடமைப்பாடுகளிலிருந்து பின் வாங்கினர் எனக் குறிப்பிட்டு இருந்தீர்கள். இதில் எங்கே தவறு நேர்ந்தது எனக் கருதுகிறீர்கள்?

இணக்கம் தெரிவித்தார். ஆனால் 17பேரையும் கொழும்புக்கு கொண்டுவர சிறிலங்காப் படையினர் முயற்சித்ததை அடுத்து அவர்கள் சயனைட் அருந்தினர். இதைத்

செயலாளராகி ஒய்வு பெற்ற துக்க இடையிலான காலப் பகுதியிலான சம்பவங்களின் அடிப்படையில் சிறிலங்கா இந்தியா உறவுகள் எப்படியிருக்கிறது எனக்கருதுகிறீர்கள்?

கியத்தைப் பாதிக்கும் இது பற்றி இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும்;

இந்தியப் படையினர் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்திய அரசியல்

பாட்டை எதிர் நோக்கவும் முடியவில்லை அவ்வாறு நிகழ வேண்டும் என்று வாதிடவும் விரும்பவில்லை. நீண்ட காலப் போக்கில் என்ன நடக்கும் என்பதைஅவர்தான் அறிவார்.

# போர் முன்னெடுக்கப்பட்டால் பொதுமக்களே பலியாக நேரும்

## - விடுவிக்கப்பட்ட பொலிசார் கருத்து

(கொழும்பு)

போரை மீண்டும் ஆரம்பித்து தீவிரப்படுத்தினாலும் கூட அரசோ விடுதலைப் புலிகளோ வெற்றிபெற முடியாது அப்பாவி பொதுமக்களே பலியாவர். அர்த்தமற்ற போரை இரு தரப்பும் முடிவுக்கு கொண்டு வந்து சமாதான வழிமூலம் இனப்பிரச்சினையை தீர்ப்பது புத்திசாலித்தனமானதாகும். போரை முன்னெடுத்துச் செல்ல விரும்பினால் நாம் நாட்டு மக்களுக்கு செய்யும் பாரிய துரோகம் என சரித்திரத்தில் இடம் பெற்றுவிடும் என விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட கருணபால என்ற சிறிலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள் கூறியுள்ளார்.

ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் வைத்து நான் சிறை பிடிக்கப்பட்டேன். சுகவீனமுற்றால் நாம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்ல சிகிச்சை வழங்கப்பட்டது இடையிடையே இடமாற்றப்பட்டோம் எனினும் நாம் நன்கு பராமரிக்கப்பட்டோம். உணவு உடை குறைவின்றி கிடைத்தது நாம் மனோரீதியில் பாதிக்கப்பட்டோமே தவிர உடல் ரீதியில் பாதிக்கப்படவில்லை. புலிகள் எம்மை சித்திரவதை செய்ய வில்லை

மற்றுமொரு பொலிசார் கருத்து வெளியிட்ட போது புதிய அரசு எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும் என கருதியிருந்தோம். ஆனால் இவ்வளவு விரைவில் விடுவிக்கப்படுவோம் என கனவிலும் எதிர்பார்க்கவில்லைஎன்றார்.

# பிரதமர் சந்திரிகாவை யாழ்ஆயர்சந்தித்துபேசினார்

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கடந்த வெள்ளியன்று பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அப்போது மன்னார் மாவட்ட ஆயர் அதி வண இராயப்பு ஞானாநந்தம் உடன்இருந்தார்.

பொருளாதார தடை நீக்கப்படுவதன் அவசியம் குறித்து ஆயர் இப் பேச்சுவார்த்தையின் போது விளக்கியிருப்பதாகவும், அதற்கு இவ்வகையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் நடந்து முடியும் வரை விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவது கடினம் என்று பிரதமர் கோடி காட்டியதாகவும், ஜனாதிபதி தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்தும் வரை உத்தரவாதம் எதையும் அளிப்பது கடினம் என்பதை உணர்த்தியதாகவும் கூறப்படுகின்றது.

## கணக்காளர் தேவை

யாழ்: நகரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு அநுபவமும் திறமையும் உள்ள கணக்காளர் தேவை. வயது 30-40 வரை, சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 10 - 09 - 94க்கு முன்பு நேரில் தொடர்பு கொள்ளவும்.

**கிருஷிகா ஆடை அகம்**

69A, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்

(சி-10259)

## திருமண வாழ்த்து

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச்செல்வி |
| **N R.ஸ்ரீ. ரவீந்திரன்** | **கிருஷ்ணவேணி** |
| (தவில் வித்துவான்) | (சுழிபுரம்) |
| (இணுவில்) | |

மங்கலமார் இன்பமண வாழ்வின் நுழைவாயில்
இங்கிணைந்து நிற்கின்ற எம்மினிய தம்பதிகாள்
பூவும் மணமுமென பொன்னும் ஒளியுமென
மேவும் இசையுமதன் லயமும் எனும்படியே
ஒன்றாய் இணைந்திட்டீர். வாழ்வில் அறம்புரிந்து
நன்றாய்ப் பேறு பதினாறும் நீர் பெற்றுயர்க,

**மங்கல வாழ்த்துரைக்கும்**

**கலைமகள் ஒலி, ஒளி**
நாவலர் மடம்
கரவெட்டி.

**6-ந் திருவிழா உபயகாரர்**
மூத்தவிநாயகர் ஆலயம்
கரணவாய்

(9301)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

நெடுங்குளம் ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலயத்தினரால் 6 9. 94இல் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

**1-ம் பரிசு இல. 02636 ரூபா 5000/-**
**ஆறுதல் பரிசு (தலா1000/-] 1. 03675**
**2. 01843 3. 01979**
**4. 09191 5. 03771**

உரியவர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

(9318) - நிர்வாகம்

## 3-ம் ஆண்டு நினைவேடு



**லெப்டினன்ட் மதுரா**

**(பரமு வடிவாம்பாள்)**

**அன்னைக்காய் 18-09-1971 அருந்தமிழ் மண்ணுக்காய் 08-09-1991**

போர் முழக்கம் பொங்கும்
புலிபாய்ந்து களம் வெல்லும்
பேர் பெற்ற தமிழ்வாழப்
பெருந்தமிழர் அணி காயும்!
ஊர் காக்க மணலாற்றில்
உயிரீந்த வடிவே யுன்
சீர் பெற்ற மதுராவாம்
சிந்தை கவர் பெயர் நிற்கும்!

இன்றைய தினம் நடைபெறும் மதிய போசனத்தில் போராளிகள், உற்றார், உறவினர்களா, நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தேவன் வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

பெற்றார், உடன்பிறப்புக்கள்

(9320)

## நயினாதீவு மக்கள் மீது பொருளாதாரத் தடை?

(கொழும்பு)

நயினாதீவுக்கு ஏனைய தீவுப்பகுதிகளிலிருந்து பொருட்களைப் பெருமளவில் எடுத்துச் செல்வதற்கு ஈ.பி.டி.பியினர் தடை விதித்துள்ளனர். அதாவது நயினாதீவு பகுதி மக்களுக்கு எதிராக 'சிறு பொருளாதாரத் தடை' ஒன்றை ஈ.பி.டி.பி. அமுல்படுத்தி வருவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் இதழ் ஒன்று தெரிவித்துள்ளது

சிறிலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்கும் நயினாதீவுக்கிராமத்தில் அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு ஈ.பி.டி.பி. யினர் முயற்சி செய்ததாகவும், அவர்களது முயற்சிக்கு அங்குள்ள மக்கள் ஒத்துழைப்பு வழங்க மறுத்ததைத் தொடர்ந்து இத்தடை அமுல்படுத்தப்படுவதாகவும் அப் பத்திரிகையின் சிறப்பு நிருபர் தீவுப்பகுதியிலிருந்து அறிவித்துள்ளார்.

அத்துடன் ஈ.பி.டி.பி யினர் நடத்தும் கப்பல் சேவையிலும், நயினாதீவு மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதாகவும், உதாசீனப்படுத்தப்படுவதாகவும் தெரிய வருகிறது.

மேலும் தேங்காய் போன்ற பொருட்கள் கூட மூன்று அல்லது நான்குக்குமேல் எடுத்துச் செல்ல ஈ.பி.டி.பி. யினர் நயினாதீவு மக்களை அனுமதிப்பது இல்லையாம்-

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு

18 - 5 - 1970

ஆள்பவன் அழிப்பு

8 - 9 - 1986

### வீரவேங்கை ராஜன்

(செல்வன் ஜேம்ஸ் உதயபிரசாத்)

(சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

துள்ளும் மான்கன்றாய்ப் பள்ளிக்குப் போய்வந்த
பிள்ளைக் கனியமுதே உதயா
அள்ளி அணைத்திட்ட அன்புக்கரங்கள்
கொள்ளும் துயர் நீ அறிவாயோ
எண்ணிரண்டு வயதினிலே - நீ
இன்னுயிரை ஈந்தளித்தாய்
மண்ணுலகம் போற்றிடவே நீயும்
மாவீரனாகி விட்டாய்
வெல்லப் பிறந்த தமிழ் வீரனே உனக்கெங்கள்
வீரவணக்கங்கள் ஏற்றுக்கொள்.

கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணீர்ப்பூக்களால் அஞ்சலி செய்யும் தாய், சகோதரர்கள்

(9307)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின்

## இலாபமீட்டும் இரு நிறுவனங்கள் குறைந்த விலைக்கு விற்பனை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இரண்டு இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார் மயமாக்கும் பாவனையில் இந்தக் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் ஒரு நிறுவனம் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் அவசர அவசரமாக விற்பனை செய்யப்பட்டிருப்பதாக எரிபொருள், மின் சக்தி துறை அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நைலோன் தொழிற்சாலையும் எண்ணெய் உற்பத்தி நிலையமும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. நைலோன் தொழிற்சாலை விற்பனை செய்யப்பட்டதனால் அதன் அரைவாசி ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர். இதன் கொடுக்கல் வாங்கல் 5 கோடி ரூபா சம்பந்தப்பட்டதாகும். இந்நிறுவனம் ஆண்டுதோறும் பத்து கோடி ரூபா இலாபம் ஈட்டி வந்துள்ளது.

இந்த சட்டவிரோதமான கொடுக்கல் வாங்கல் குறித்து விசாரணை ஆரம்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதியின் தற்போதைய வரியைக் குறைத்து டீசல், மண்ணெய் போன்றவற்றின் விலையைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்:

### சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி கல்விக் கோட்ட அலுவலகங்களுக்கு / பாடசாலைகளுக்கு, பயிலுநர் பதவியில் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ள அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10-00 மணியளவில், இத்திணைக்களத்துக்குச் சமுகமளித்து, நேரடியாகத் தம்மைச் சந்திக்குமாறு, வலயம் 1இன் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுக் கொண்டுள்ளார்.

வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின்

கணணி-இலத்திரனியல்-மனையியல் கண்காட்சி

9-9-94-ம் 10-9-94-ம்

அன்பளிப்பு ரூபா 10/- ரூபா 5/-

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-10284)

மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலய
வளர்ச்சி நிதிக்காக பழைய மாணவர்

## ஜனநாயக உரிமை மீண்டும் கிடைத்ததற்கு சமனாகும்

\- தொண்டமான்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினை தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையை தான் வரவேற்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கு ஓர் தீர்வு ஏற்படவேண்டும் என்ற ஓர் தெளிவான கொள்கையில் சந்திரிகா இருப்பதாகவும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை தான் வழங்க இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவசரகாலசட்டத்தை இவ் அரசாங்கம் நீக்க முன் வந்து இந்த நாட்டு மக்களுக்கு மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமை கிடைத்ததற்கு சமமான ஓர் விடயம் என்றும் எனவே தான் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

## பிரதமரின் நடவடிக்கைக்கு மேற்றிராணியார் பாராட்டு

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையின் ஒரு பகுதியை பிரதமர் நீக்கியதன் மூலம் நாட்டை துணிச்சலோடும் புரிந்துணர்வோடும் ஐக்கியப்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளார். இத்தடையை நீக்குமாறு யாழ் பகுதி சாதாரண மக்கள் விடுத்த வேண்டுகோளை அவர் நிறைவேற்றியுள்ளார் என கொழும்பு அதிமேற்றிராணியார் அதிவண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நல்லெண்ண நடவடிக்கையை ஏற்றுக்கொண்டு நான்கு ஆண்டுகளாக தம் வசம் வைத்திருந்த 10 பொலிசாரை விடுதலைப் புலிகள் விடுவித்துள்ளனர். இது சமாதான முயற்சிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

## முன்னாள் அமைச்சர்களின் வீட்டுரிமைகள் ரத்து

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், மற்றும் ஐ. தே. க தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரஜித்த செனவிரட்ண ஆகியோருக்கு, தேர்தலுக்கு சற்று முன்பாக அரசினால் வழங்கப்பட்ட சொகுசு வீடுகளின் உரிமையை வீடமைப்பு நிர்மாணத்துறை பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா இரத்துச் செய்துள்ளார்

இந்த வீடுகள் என்ன அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்தும், இது போன்று நடைமுறை விதிகளுக்கு அப்பால் வழங்கப்பட்ட காணி, வீடுகள் முதலியன குறித்தும் விசாரணைகள் நடத்துமாறும், இவை சம்பந்தமாக இடம் பெற்ற கணக்கு விபரங்களையும் பரிசோதனை செய்யுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் காலத்தின் போது எல்விடில மாடிவீட்டு கட்டிடத்தில் பெறப்பட்ட இச்சொகுசு வீட்டுக்கு திருமதி ரேணுகா ஹேரத் 9 இலட்சம் ரூபாவை செலுத்தியுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வடபகுதி ரயில்பயணிகளிடம் தொடர்ந்து கொள்ளை

(கொழும்பு)

வடபகுதி செல்லும் ரயில் பயணிகளிடம் உள்ளபொருட்கள் கொழும்பு கோட்டை

வவுனியாவிற்கும் இடையிலான ரயில் போக்குவரத்தில் இத்தகைய கொள்ளைச்சம்பவங்கள் அடிக்கடி இடம்

கடந்த 04. 09. 94 அன்று எமையெல்லாம் ஆறாத்
துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட
சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்று
பதிவாளர்

திரு. தம்பு வேலாயுதபிள்ளை

அவர்களுக்கு

(குடமியன், வரணி)

# எமது இதய அஞ்சலி



வானின்றி வையகம் வாடி மடிந்ததென்ன
நீரின்றி வாடும் எம் நிலையினை ஒரு கணம் பாரீர்
நாவினிக்க நல்மொழி பேசி நாமினிக்க நாடி
வந்த எம் பதிவாளரே
எமைப் பிரிந்து இரண்டு தினம் இருந்த வேளை
பார்த்து
எத்தன் மரண தூதன் உமைக்கவர்ந்து சென்றான்
வென்றது அவனல்ல நாம் தான்
இனி எவருமே நெருங்க முடியாதெம்மனதுள் உம்மை-
வைத்து விட்டோம். சாவுக்கு நாம் விடுவோம் சவால்-

**நீதியாளர்கள், பணியாளர்கள்**
**தமிழீழ மாவட்ட நீதிமன்று**
**சாவகச்சேரி**

(9312)

---

வளர்ச்சி நிதிக்காக பழைய மாணவர்
சங்கம் நடாத்தும்
பருத்திநகர் சாண்டோ M. துரைரத்தினத்தின்
மாணவன் சாண்டோ S. செல்வராசாவினால்
பயிற்றப்பட்ட பொலிகை ஒற்றுமை
விளையாட்டுக் கழக வீரர்களின்

# வீரதீரச் செயல்கள்



★ மார்பின்மீது அதிபாரங்கொண்டலொறிஒன்றினைஏற்றுதல்
★ நெருப்பு புதைகுழியினுள் படுத்திருத்தல்
★ மோட்டார் சைக்கிள் ஒன்றினை வாயினால் தூக்குதல்
★ ஒரே நேரத்தில் இரு உழவு இயந்திரங்களை எதிரெதிராக ஏற்றுதல்

இன்னும் பல பல நிகழ்வுகள்

இடம்: இராமநாதன் கல்லூரி மைதானம், மருதனார்மடம்.
காலம்: 11 - 09 - 94 இரவு 7 மணி
அன்பளிப்பு:- 100/-, 50/-, 20/-

(9305)

---

பயணிகளிடம் உள்ளபொருட்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலும் ரயிலிலும் வைத்துக் கொள்ளையடிக்கப்படுவதாக பலமுறை புகார் செய்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வடபகுதி பயணிகள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

புலோலி மேற்கைச்சேர்ந்த மரியநாயகம் பிரான்சிஸ் என்பவர் கடந்த சனிக்கிழமையன்று அதிகாலையில் கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து தமது ரொக்கப் பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த ஆவணங்கள் உடுப்புக்கள் ஆகியவற்றை இழந்துள்ளார்,

கொழும்பு கோட்டைக்கும்' ... இத்தகைய கொள்ளைச்சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

---

## வாகனங்களில் சந்திரிகாவின் படம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் சகல அரசாங்க பஸ்களிலும், தனியார் வாகனங்களிலும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவின் பெரியளவிலான புகைப்படங்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே தென்னிலங்கையிலுள்ள அரசாங்க பஸ்கள் நீல வர்ணத்திற்கு மாற்றப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

---

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்நகர் நவீன சந்தையில் அமைந்துள்ள
லிங்கம் புடவை அகம் ) இணைந்த
சோதி புடவை அகம் ) ஆதரவில்
ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்
4-வது மாபெரும் மாட்டுவண்டி
சவாரிப்போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்
காலம்:- 11.09.1994 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 2.00 மணி.
போட்டிகள்:- A,B,C என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

★ கைக்கொடி சவாரியும் இடம்பெறும்;

தங்கப் பதக்கம் உட்பட பல பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்;

பார்வையாளர் பிரவேசம் இலவசம்

ஆவரங்கால் விவசாயிகள்

(9310)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## சிந்தனைக்கு..

இச்சைகளை நிறைவேற்றுவதில் அல்ல:
மட்டுப்படுத்துவதில் தான், அமைதி அடங்கியுள்ளது.
- ரெஜினோல்ட் ஹீபர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 08-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

# காற்றுள்ளபோதே தூற்றும் காமினி

பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஐ. தே. கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தை காமினி திசாநாயக்கா வெகு சாதுரியமாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிகின்றது. இதன் மூலம் ஐ தே கவின் உயர்பீடம்,வரை அவர் விரைவில் எட்டிப் பிடித்து விடுவார் என்றே கூறலாம்.

பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியானது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது இத்தோல்விக்கான பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும் அதேவேளை, அதனைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் அவர் இல்லை என்றே அண்மைய சம்பவங்கள் நிரூபிக்கின்றன. இதற்கு இரண்டு விடயங்கள் சிறப்பாக சுட்டிக்காட்டக் கூடியனவாகவுள்ளன.

அதில் ஒன்று ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கின்ற போதும் தோல்வியின் பின் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பெரிதாக முரண்பாடு கொள்ளவில்லை. ஐ தே.கட்சியினர் சலிப்படையும் அளவிற்கே அவரின் நடவடிக்கை உள்ளது, முன்னாள் ஐ, தே. க. அமைச்சர் ஒருவர் பொ. ஐ. முன்னணி அரசின் பியோன்போன்று ஜனாதிபதி டி பி. செயற்படுவதாகச் சாடும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

அடுத்ததாக டி.பி. விஜேதுங்கா தோல்வியின் பின் ஐ.தே கவிற்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தையோ அன்றி கட்சி எதிர்நோக்கும் நெருக்கடிகளையோ அதன் தலைவர் என்ற ரீதியில் தீர்த்துவைக்கவும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக, தேர்தலில் ஏற்பட்ட தோல்வி குறித்து ஆராயக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அத்தினத்தில் சுகவீனம் என்ற ரீதியில் அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டாலும், அவரதுசுகவீனத்தை ஒரு சாட்டாகவே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

இந்தவகையில் டி.பி விஜேதுங்கா பாராளுமன்றத்

# பொதுத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வி எதிர்பார்க்கப்பட்ட ஒன்று

## முன்னாள் பொதுச் செயலர் குரே

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐ தே.க விற்கு ஏற்பட்ட பின்னடைவு தேவையற்றதும், தவிர்க்கமுடியாததும் ஆகும். ஆனாலும் இத்தகைய தோல்வி எதிர்பார்க்கப்பட்டது ஒன்றே இவ்வாறு ஐ.தே கவின் முன்னாள் பொதுச் செயலாளரும் ,முன்னாள் அமைச்சருமான சிறிசேன குரே கூறியுள்ளார்.

ஜனாதிபதியாகவும். கட்சித் தலைவராகவும் டி பி. விஜேதுங்கா பதவியேற்ற பின்னர் ஐ.தே.க எங்கு தவறு விட்டுள்ளது என்பது குறித்து மீள்பார்வை ஒன்றை எழுதியுள்ள சிறிசேன குரே அதன் ஒரு பிரதியை ஜனாதிபதி டி பி விஜேதுங்காவிற்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில். உண்மையான ஒரு சுயவிமர்சனம் மேற்கொள்ளப்பட்டு கட்சி தனது தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யப்படாவிட்டால் ஜனாதிபதி தேர்தலிலும் கட்சி தோல்வியுறுவது நிச்சயம் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்த ஒரு மனிதர் என்றவகையிலும் ஜே.வி.பியினரின் நடவடிக்கைகளால் கட்சியின் அமைப்புக்கள் மிகவும் பலவீனப்பட்டுப் போயிருந்த 1988/89ம் ஆண்டுகளில் கட்சியை வெற்றியை நோக்கி வழிநடத்துவதில் பெரும் பங்கு வகித்தவன் என்ற அடிப்படையிலும் இதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி தோல்வியுற்ற போதிலும் 44 சதவித வாக்குகளை பெற்றுக் கொண்டிருப்பதும், கடந்த இருதசாப்தங்களுக்கு மேலாக ஆட்சிநடத்தி தோல்வியுறுவது ஜனநாயகத்தில் சாத்தியம் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டமை ஜனாதிபதி வேட்பாளரின் பலவீனத்தை சரிக்கட்டும் ஒரு முயற்சியாக இருந்துள்ளது எனினும் ஐ தே க களத்திற்கு செல்வதற்கு முன் கருத்தொருமிப்பு கலந்தாலோசனை போன்ற ஜனநாயக நடைமுறைகளின் ஊடாக கட்சியின் சகல மட்டத்தையும் உற்சாகப்படுத்துவதில் ஜனாதிபதி ஈடுபடாதது அதிர்ச்சி தரக் கூடியதே, ஒருங்கிணைந்த ஒருதலைமையின்கீழ் நீண்டகாலத்திற்கு திறமையான வகையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் பொதுஜன ஐக்கிய முன்னணி பெற்ற சுமார் நான்கு லட்சத்திற்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளை சுலபமாக குறைத்தும் இருக்க முடியும். திடீர் தேர்தல் ஒன்று எதிர்க்கட்சியிலும் பார்க்க ஆளும் கட்சிக்கு அதிர்ச்சி தருவதாக இருந்தது என்பது இங்கே குறிப்பிட வேண்டியதாகும் எனவும் தெரிவித்துக் கொண்டுள்ளார். அத்துடன் 1988 பொதுத் தேர்தலில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா பிரேமதாசாவை தெரிவு செய்தமைக்கு ஒத்ததாக பாராளுமன்றப் பொதுத் தேர்தல் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்கள் பலப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்; எனினும் டி பி விஜேதுங்கா அதனைத் தவிர்த்ததன் மூலம் கட்சியின் நலன்களைப் பலியிட்டுவிட்டார் தோல்வியின் பின்பும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உட்கட்சித் தேர்தல் நடத்தியது மூலம் கட்சியை முழு அளவில் பிளவுபடுத்த டி.பி விஜேதுங்கா அனுமதித்து விட்டார்.

எனினும் இத் தோல்வி தான் முதல் சம்பவம் அல்ல. ஆகஸ்ட் 1993 முதலே-அதாவதுஜனாதிபதிபதவியில்விஜேதுங்கா அமர்ந்தது முதலே தவறுக்கு மேல் தவறுகளாக இழைக்கப்பட்டு வந்துள்ளது தான்தோல்விக்குகாரணமாக இருந்துள்ளது ஜனாதிபதியாக விஜேதுங்கா பதவியேற்ற இரு மாதங்களில் சில குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இரகசிய அறிக்கை ஒன்றை தயாரித்து கையளித்திருந்தேன் ஆனால் எனது அறிவுக்கு எட்டாமலும், எனது எண்ணத்திற்கு மாறாகவும் அவ் இரகசிய அறிக்கை பத்திரிகைகளில் வெளியானது இங்கே குறிப்பிடக்கூடியது எனவும் தெரிவித்துள்ளார்.

## நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஒரு வருடத்தினை பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும், சேவையிலிருந்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளரினால் நிரந்தர பட்டதாரி ஆசிரியர் நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிரந்தரநியமனத்தில்மேற்படி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 47 ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்எனகோட்டக் கல்வி வட்டாரங்களிலிருந்து அறியவந்துள்ளது. (41

55 வயதுக்குப் பின்னும்

## சேவையில் இருப்போரின் விபரம் திரட்ட பணிப்பு

(கொழும்பு)

முப்படைகளிலும், பொலிசிலும் பணியாற்றும் 55 வயதுக்கு மேற்பட்டவர்களின் விபரங்களை உடனடியாகத் திரட்டுமாறுபிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவை பணித்துள்ளார்,

வருங்காலத்தில், 60 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க மற்றும் படை அதிகாரிகளின் கடமை காலத்தை நீடிப்பதில்லை என்பதில் அரசு அக்கறையுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாரதி விழா

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரும் கலாசாரக் குழுவும் இணைந்து நடாத்தும் பாரதி விழா

# சர்வதேச சமய அமைப்பு யாழ்ப்பாணம் வர முயற்சி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன். பேச்சுவார்த்தைகளை நடத்த என சர்வதேச சமய சமாதான அமைப்பு விரைவில் யாழ் செல்ல இருப்பதாக கொழும்புபத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி அமைப்பு, பிரதமர்சந்திரிகா குமாரணதுங்கா மற்றும் அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்தவர்களுடன், பேச்சுக்கான அனுமதியை கோரி கடிதமொன்று அனுப்பி வைத்துள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரதமர் சந்திரிகா தலைமையிலான பொது மக்கள் கூட்டணி அரசாங்கம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் கண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு எடுத்து வரும் முயற்சிகளையும் இவ் அமைப்பு தனது கடிதத்தில் பாராட்டியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவுப்பகுதி மக்களுக்கு நோர்வேயிலிருந்து உதவி

(யாழ்ப்பாணம்)

நோர்வே நாட்டில் வாழும் தீவுப்பகுதி மெரிஞ்சிமுனை கிராமத்தவர்கள் தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள தமது கிராம மக்களின் புனர்வாழ்விற்கு நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினுடாக நிதியுதவி செய்துள்ளனர்.

இவ் உதவி குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரிற்கும் எழுநூற்றைம்பது ரூபா வீதம் இம்முறை யாழ்ப்பாணம் வந்துள்ள நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வந்துள்ள நோர்வே நாட்டு செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் இருவரும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளை பிரதிநிதிகளும் மெரிஞ்சிமுனை கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒவ்வொருவரது குடிசைகளிற்கும் நேரில் சென்று மேற்படி உதவியை பணமாக கையளித்தனர்.

இந் நிகழ்வு நேற்று கிளாலி பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்றது. (88)

# குண்டு வெடிப்பில் கடை, வீடுகள் சேதம்

அம்பாறை சாய்ந்தமருது பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று மூன்று குண்டுகள் வெடித்ததனால் ஒரு கடையும் மூன்று வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

எவரும் இக் குண்டு வெடிப்புகளில் காயமடையவில்லை சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள ஒருகடையின் முன்னாலும், வேறு இரு வீடுகளிலுமே இக்குண்டுகள் வெடித்தன தேர்தல் கால பகைமையே இச்சம்பவங்களுக்கு காரணமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பாராளுமன்ற உறுப்பினரை கொலை செய்ய சதி

(கொழும்பு)

புத்தளம் மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். டி. ஜயரட்ணாவைகுண்டு வீசி கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

புத்தளத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டம் ஒன்றில் வைத்து அவரைக் கொல்லதிட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதுகுறித்து மாதம்பேபொலிசார் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

# 20ஊழல் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

முன்னைய அரசில் ஊழல்

ஊழல் நடவடிக்கைகளின் விசாரணைகள் பூர்த்தியடை

விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

இந்தவகையில் டி.பி விஜேதுங்கா பாராளுமன்றத் தேர்தல் தோல்வியினால் துவண்டு போய்விட்டார் என்பது மட்டுமல்ல, அவர் தனது எதிர்கால அரசியல் அஸ்தமித்துவிட்டதாகவும் கருதுவதாகவே தெரிகின்றது. இந்நிலையில் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா என்பதிலும் கேள்வியே உள்ளது. பெரும்பாலும் அவர் போட்டியிடமாட்டார் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆனால் ஐ.தே.கவின் தோல்வியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவர் காமினி திசாநாயக்காவே ஆகும். ஆரம்பத்தில் தேர்தல் தோல்வியை ஏற்றுக் கொள்ளாது அரசாங்கத்தைக் கைப்பற்ற அவர் எடுத்த முயற்சியில் இருந்தே அவர் தோல்வியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார் என்றே கூறலாம்.

இந்நிலையில் பிரதமர் பதவி தான் கைநழுவிப் போனாலும், எதிர்க்கட்சித் தலைவர்பதவியைத்தானும் அவரால் கைப்பற்ற முடிந்ததெனலாம். இந்நிலையில் அவரது குறிக்கோள் முதலில் ஐ.தே.க தலைமைப் பதவியும் அடுத்து சிறிலங்கா ஜனாதிபதி/ பிரதமர் பதவி என்பதாகும்.

ஒரு வகையில் ஐ. தே. கவின் இத் தோல்வியே காமினி திசாநாயக்காவிற்கு பெரும சிரமங்கள் இன்றி சிறுதடைகளாக எழுந்தவற்றைத் தாண்டி ஐ. தே கவின் தலைமையை பிடிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்துள்ளதெனலாம். இல்லாது போனால், அதாவது கட்சி வெற்றி பெற்றிருக்குமானால், கட்சியில் இருந்து வெளியேறி பின்னர் இடையில் புகுந்தவரான காமினிதிசா நாயக்காவினால்கட்சித் தலைமையை இலகுவில் நெருங்குவது கடினமாகவே இருந்திருக்கும். முதலில், ஜனாதிபதி டி-பி- விஜே துங்கா இன்றைய தயார் நிலைக்கு வந்திருக்கவோ அன்றி விட்டுக் கொடுப்பிற்கோ தயாராக இருந்திருக்க மாட்டார் என்பதோடு ரணில், போன்றவர்களையும் காமினியினால் இலகுவில் தாண்டியிருக்க முடியாது.

இந்நிலையில், ஐ.தே.கவின் தோல்வியில் காமினி லாபம் அடைந்துள்ளார் என்பதே அரசியல் யதார்த்தமாகவுள்ளது. இந்த வகையில் அரசியல்நாகரிகம், ஜனநாயகப், பண்புகள் என்பனவற்றிற்கு சற்றுத் தொலைவிலேயே நிற்கும் காமினி திசாநாயக்கா இம்முறை தவறினாலும், அடுத்தஜனாதிபதியாகவோ/ அன்றிப் பிரதமராகவோ ஆவதற்கான வழிமுறைகளைத் தற்பொழுதே சிந்திக்கத் தொடங்கியிருப்பார் என்பதில் சந்தேகம் தேவையில்லை.

அமைச்சர் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வன கறையுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இல.வங்கி புதிய தலைவராக ராஜன் ஆசிர்வாதம்

(கொழும்பு)

இலங்கை வங்கியின் புதிய தலைவராக ராஜன் ஆசிர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார், மக்கள் வங்கித் தலைவராக டாக்டர் காமினி பெர்ணான்டோவும், முதலீட்டுச் சபைத் தலைவராக வாஸ் குணவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், கணக்கியல் மற்றும் வங்கி நிர்வாகத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவராக ஜகத் விக்கிரமசிங்க விரைவில் பொறுப் பேற்கவுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

மேற்படி நிறுவனங்களின் முன்னைய பணிப்பாளர் சபைகள், புதிய அரசு பதவியேற்றவுடன் ராஜி நாமாசெய்தது குறிப்பிடத்தக்கது

# வடக்கு பயணிகளிடமிருந்து உடைமைகள் திருட்டு

(கொழும்பு)

வடபகுதிப் பயணிகள் பலரது உடைமைகள் கோட்டை இரயில் நிலையத்தில் வைத்து களவாடப்பட்டு வருகின்றன இது குறித்து, புகார்கள் தெரிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவிலலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்றும், யாழ் வாலிபர் ஒருவரது உடைமை, இனந்தெரியாத ஒருவரால் பறித்துச் செல்லப்பட்டது.

# ஜனாதிபதி தேர்தல் சந்திக்க ஐ.தே.க. தயார்

- காமினி

(கொழும்பு)

ஐ. தே. க ஜனாதிபதி நிர்வாக முறையை மாற்ற ஆதரவு தருமென நாங்கள் அரசுக்கு கடிதமெழுதியும் இதுவரை பதில் கிடைக்கவில்லை ஜனாதிபதித் தேர்தல் வரும்பட்சத்தில் அதனை எதிர்நோக்க தயாராகஇருப்பதாகவும்எதிர்க்கட்சித்தலைவர்காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்,

கடந்த திங்களன்று பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஐ. தே. க உறுப்பினர்கள் கலந்துகொண்ட மாநாடொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இம் மகாநாட்டுக்கு ஜனாதிபதி டி,பி விஜேதுங்கா தலைமை தாங்கினார்.

தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்ட வன்செயல்கள் பற்றியும் அதனால் ஐ,தே.க உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும் இம் மாநாட்டில் எடுத்துக் கூறப் பட்டது

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரும் கலாசாரக் குழுவும் இணைந்து நடாத்தும் பாரதி விழா 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் முன்றலில் விசேட ஆணையாளர் திரு.கா.சந்திரராசா தலைமையில் நடைபெறும் இவ் விழா நிகழ்வில் சொற்பொழிவுகள், நாட்டிய நிகழ்ச்சிகள், இன்னிசை, பட்டிமண்டபம், இசை நாடகம், அபிநய நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற சமூக நாடகமும் இடம்பெறவுள்ளன.

(41)

# நவராத்திரி நடன இசைப் போட்டி

(தொல்புரம்)

நடனம், இசை பற்றிய பொதுவான திறமையுடைய மாணவர்கள் தமது திறமையை வெளிக்காட்ட வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாகவும், மாணவர், ஆசிரியர் ஆகியோரது ஆக்க சக்தியை மேம்படுத்தவும், இரசிகத்தன்மையை வளர்க்கும் முகமாகவும் நவராத்திரி நடன இசைப் போட்டிகளை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர் நடாத்தவுள்ளனர் இசைப் போட்டிகள், நடனப் போட்டிகள், விசேட தனி நடன நிகழ்ச்சி போன்றவற்றை மிகவிரைவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (41(

# அதிபர்கள் கூட்டம்

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர் கூட்டம் இன்றுபிற்பகல் 3 00 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ப, விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் (41)

# எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

முன்னைய அரசில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருபது அமைச்சர்களுக்கும் இருநூறு அதிகாரிகளுக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அரசியலமைப்பு விவகார, நீதி அமைச்சர் பேராசிரியர் தெரிஜீ எஸ். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊழல் நடவடிக்கைகளின் விசாரணைகள் பூர்த்தியடைந்து, குற்றம் உறுதியாகும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகளை இவர்கள் எதிர்நோக்கவேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# கொள்ளைக் கோஷ்டி தலைவர் கைது

மாத்தளை, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் கொள்ளை, வழிப்பறி போன்றவற்றில் ஈடுபட்ட குழுவொன்றின் தலைவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபரிடமிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருட்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். வேறு சில இடங்களில் மறைத்து வைத்திருந்த பெறுமதி வாய்ந்த பொருட்களையும் இவரின் தகவலையடுத்து பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

# பாரதி வாரம்

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் பாரதி வார விழா இன்று காலை 10 மணியளவில் ஆனைக்கோட்டை பொதுநூலக மண்டபத்தில் விசேட ஆணையாளர் திரு. து- வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு, சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்வார்- சிறப்புவிருந்தினராக சண்டிலிப்பாய் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு- கு. இளந்திரையன் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் மேலும் இந் நிகழ்வில்கருத்துரைகள், கவிதைகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன- [41)

# கண்டெடுப்பு

புகைப்படம் ஒன்றும் சைக்கிள் திறப்பு ஒன்றும் கிட்டு பூங்காவுக்கு முன்பாக கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

1994.09.08

## வியாழன் இரவு

08. 01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10 - சித்தமருத்துவக் குறிப்புகள்
08. 20 - உழைப்போம் உயர்வோம் ''மண்ணை நம்பினால்'' குறு நாடகம்
08. 30 - செய்திகள்
08. 40 - எட்டிலிருந்து -தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலிலிருந்து 'மலேசியாவில் தமிழ் சிறுகதை' எனும் கட்டுரையின் சில பகுதிகள்.
08. 50 - மலரும் மொட்டுக்கள்

1994.09,09

## வெள்ளி காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 -மணியாரம்
07. 30 -செய்திகள்
07. 35 -பத்திரிகைச் செய்திகள்
07. 40 -தாயகப்பாடல்கள்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## தியாகி திலீபனின் நினைவுதினஏற்பாடுதீவிரம்

யாழ். குடாநாடெங்கும் தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள்வெகு உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தியாகி திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த 15-ம் திகதியிலிருந்து வீரச்சாவடைந்த தினமான 26-ம் திகதி வரையான காலப் பகுதி வரை வட்டவை ரீதியாக சிரமதானங்கள் நடைபெற இருப்பதுடன் கருத்துரைகள் வழங்கப்பட உள்ளன. சந்திகள் தோறும் பதாகைகளும் இல்லங்கள் தோறும் குடில்கள் அமைத்து தியாக தீபம் திலீப்னின் உருவப் படம் வைத்து உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-

தென்மராட்சியில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை வட்டவை ரீதியாக இந் நிகழ்வினை ஒழுங்கு படுத்தியுள்ளதுடன் பொது ஸ்தாபனங்கள் மற்றும் பாடசாலைகளும் துரிதமாக செயற்பட்டு வருகின்றன (86)

## ஐந்து மாணவர்களுக்கு துரைராசா தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)

அமரர் அழகையா துரைராசாவின் பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிதியத்தின் மூலம் யாழ். பல்கலைக் கழகத்தின் 14 வது பட்டமளிப்பு விழாவன்று பட்டம் பெறும் ஐந்து மாணவர்சளுக்கு பேராசிரியர் துரைராசா தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன-

இதில் அரைப் பவுண் கொண்ட நான்கு பதக்கங்கள் நான்கு பீடங்களுக்கும், ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு பவுண் கொண்ட பதக்கம் பல்கலைக்சழக ரீதியிலாக சகல துறைகளிலும் சிறந்த மாணவன் ஒருவருக்கும் வழங்கப்படவுள்ளது. இதனை கொலின்ஸ் என்கின்ற மாணவன் பெற்றுக்கொள்ளவுள்ளார்-

இதுவரைகாலமும் துணைவேந்தர் துரைராசா நிதியத்தில் பொது மக்களினால் அன்டளிப்புச் செய்யப்பட்ட சுமார் 1,30,000 ரூபாவின் வட்டியைக் கொண்டே இத் தங்கப் பதக்கங்கள் செய்து வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது- (பா, தி)

## 20,000 பை சீமெந்து புனர்வாழ்வுபிரிவு கோரியது

யாழ்.மாவட்டத்திற்கு உடனடியான அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கென சுமார் 100 மெற்றிக் தொன் சீமெந்தை அனுப்பி வைக்குமாறு புனர்வாழ்வு அமைச்சை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி கேட்டுக்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் வட பகுதி மீது சீமெந்து எடுத்து வருவதற்கென அமுலில் இருந்துவந்த தடையை சிறிலங்கா அரசு தளர்த்தியமையைத் தொடர்ந்து இக் கோரிக்கையை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி விடுத்துள்ளது.

இச் சீமெந்தை கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்கள், மலசல கூடங்கள் போன்ற உடனடித் தேவைகளைப்பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இந்த 20,000 பைக்கற் சீமெந்தையும் ஒரே தடவையில் கப்பல் மூலமாக அனுப்பி வைக்கும்படியும் அக்கோரிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது (பா) (தி)

## கலந்துரையாடல்

பருத்தித்துறை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 00 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.வி.ரி.செல்வரட்ணம் தெரிவித்தார்-

# சகஜ வாழ்க்கை திரும்பவேண்டும் யாழ். மக்களின் விருப்பம் அதுவே

## விடுதலையான பொலிசார் பிரதமரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

உங்கள் மீது, யாழ்ப்பாண மக்கள் அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என புலிகளின் தடுப்புக் காவலிலிருந்து விடுதலையாகி கொழும்பு வந்த பொலிசார் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் தெரிவித்துள்ளனர்,

கடந்த ஞாயிறன்று நாரஹென்பிட்டியிலுள்ள பொலிஸ் ஆஸ்பத்திரியில் விடுவிக்கப்பட்ட கைதிகளை பிரதமர் சந்தித்து உரையாடினார்.

பிரதமர்; நீங்கள் எவ்வளவு காலம் கைதிகளாக இருந்தீர்கள்?

பொலிசார்: நான்கு வருடங்களும் நான்கு மாதங்களும்

பிரதமர்: புலிகள் உங்களைத் தாக்கினார்களா?

பொலிசார்: ஆரம்பத்தில் அப்படி இருந்தது. பின்னர் கவனித்தார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தினர் எம்மைச் சந்தித்த பின்னர் நாம் கவனிக்கப்பட்டோம்.

பிரதமர்: நீங்கள் இருட்டறையில் வைக்கப்பட்டிருந்தீர்களா?

பொலிசார்: இல்லை. இரட்டை மாடி வீடொன்றின் மேல்மாடியில் வைக்கப்பட்டிருந்தோம். கீழ் மாடியில் இருந்தவாறு அவர்கள் எம்மைக் கண்காணித்தார்கள்.

பிரதமர்: இன்னும் எவ்வளவு பேர் உள்ளனர்?

பொலிசார்: சாதாரண மக்கள் ஏழு பேருடன் ஐம்பத்தேழு பேர் உள்ளனர்,

பிரதமர்; அன்ரன் பாலசிங்கம் உங்களைப் பார்க்க வந்தாரென்பது உண்மையா?

பொலிசார்; ஆம் வந்தார்- வந்து எம்மிடம் பேசிவிட்டுச் சென்றார்-

பிரதமர்: சிங்களத்தில் பேசினாரா?

பொலிசார்: ஆம் நன்றாக பேசினார்-

பிரதமர்: அவர் என்ன கூறுகிறார்?

பொலிசார்: தடை விதிக்கப்பட்ட மிகுதிப் பொருள்களையும் அனுப்பும்படி சொல்லச் சொன்னார்- அதன் பிறகு ஏனையோரையும் அனுப்புவதாக கூறினார்- ஏனைய பொலிசாரையும் விடுவிக்க தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரதமர்: பார்ப்போம் அதை செய்ய முயற்சிக்கிறோம்- அவர்களைப் பற்றி மட்டுமன்றி இந்த யுத்தம் காரணமாக எதிர் கொண்டுள்ளவர்கள் பற்றியும் நாம் பார்க்கவேண்டும்-

பொலிசார்: நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே நாங்கள் விடுதலையாக முயற்சி மேற்கொண்டீர்கள்- இதையிட்டு நாங்கள் உயிருள்ளவரை கடமைப்பட்டுள்ளோம். முன்னைய அரசாங்கத்திடம் கோரினோம்- அரசு அதனைச் செய்யவில்லை- எம்மை விடுதலையாக்க முயலாவிட்டாலும் ஆர்வம் காட்டக்கூட அவர்கள் தவறிவிட்டனர். இது உங்களை வருத்தியது-

பிரதமர் அவர்களே, நாங்கள் புலிகளிடம் சிக்கவில்லை எமது பொலிஸ் நிலைய அதிகாரி எம்மைப் பிடித்துக் கொடுத்தார்- எம் எல்லோரையும் பிடித்துக் கொடுத்தவர் அவர் தான்-

பிரதமர்: யார் அந்த அதிகாரி?

பொலிஸ் மாஅதிபர், குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை பிரதமரிடம் கூறுகிறார்-

பிரதமர்: தேர்தல் நடந்தது உங்களுக்குத் தெரியுமா?

பொலிசார்: ஆம், நீங்கள் போட்டியிடும் விபரம் ஈழநாதம் எனும் புலிகளின் பத்திரிகையில் வெளியாகியிருந்தது

பிரதமர்: நீங்கள் எப்படி அதைப் படித்தீர்கள்? உங்களுக்கு தமிழ் தெரியுமா?

பொலிசார்; தமிழ் தெரிந்த ஒருவர் எமது மத்தியில் இருந்தார்- அவர் மூலம் அறிந்து கொண்டோம்-

பிரதமர்: என்னைப் பற்றி ஏசி எழுதியிருந்தார்களா?

பொலிசார்: இல்லை; பிரதமர் அவர்களே, உங்களைப் பற்றி நன்றாக எழுதியிருந்தார்கள்- நீங்கள் ஆட்சிக்கு வந்தால் யுத்தம் முடிவுக்கு வரலாம் என எழுதப்பட்டிருந்தது-

பிரதமர்: யாழ்ப்பாணத்தின் சாதாரண பொதுமக்கள் உங்களை எப்படி சந்தித்தார்கள்?

பொலிசார்; யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்க செல்லும் வேளைகளில்

பிரதமர்: அவர்கள் என்ன கூறுகிறார்கள்?

பொலிசார்: சாதாரண பொதுமக்கள் யுத்தம் முடிவடைந்து சமாதானம் வரவேண்டுமென கோருகிறார்கள்- யாழ்ப்பாண மக்கள், உங்கள் மீது நல்லமதிப்பு வைத்துள்ளார்கள்- நாங்கள் பருத்தித்துறையிலிருந்து வரும்போது ஜெயவேவா என்று கோஷமெழுப்பினார்கள்-

பிரதமர்: தமிழிலா அவர்கள் கோஷமெழுப்பினர்?

பொலிசார்: ஆம் பிரதமர் அவர்களே;

பிரதமர்: அவர்கள் சமாதானத்தை விரும்புகிறார்களா?

பொலிசார்: ஆம். முதலில் சகஜ வாழ்க்கை திரும்பவேண்டும் என விரும்புகிறார்கள்-

### குடாநாட்டிற்கு

வடபகுதி. யுத்தத்தினால் மின்னொளி இன்றி இருட்டாகவே உள்ளது. அங்கு மின்சாரத்தை மீண்டும் வழங்க, மின்சாரத்துறை அமைச்சு தயாராகவே உள்ளது. இதற்கான செலவு எவ்வளவு என அதிகாரிகளை ஆராயும்படி கேட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

### புலிகள்

பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பதால் யாரோடு பேசுவது என்பதை பேராளிகள் அறிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்-

### புலிகளுடன்

இடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே அரசாங்கம் இவரை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கவுள்ளதாகவும்,

எந்தக் கட்சியையும்சாராத நடுநிலையாளராக இவர் இருப்பதனாலும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராகவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியவர் என்பதனாலும் இவரை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட தகுதியுடையவர் என அரசாங்க வட்டாரங்களில் கருதப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### வீரச்சாவு

கும் இடையில் கடந்த

## பேராளி, ஆதரவாளர் நேரடி மோதலில் வீரச்சாவு



லெப். ஆழியன் (லஷ்மன்)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சந்தனமடு ஆறு எனுமிடத்தில் கடந்த 4-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவரும் முழுநேர ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் ஆழியன் / லஷ்மன் (ஆறுமுகம் சாந்தலிங்கம்-மட்டக்களப்பு), மற்றும் முழுநேர ஆதரவாளரான சின்னவன், (சித்தாண்டி, மட்டக்களப்பு) ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### சுன்னாகம்

பான ஒருவர் இப்போது கொழும்பில் பணியாற்றுவதாக நான் கூறினேன்- விரிவான விவரங்களை அவரை அழைத்து பேசுவதன் மூலம் பெறலாம் என நான் பிரதமருக்கு சுட்டிக் காட்டினேன்.

கேள்வி: தற்போதைய அரசு இனப்பிரச்சினை தீர்வுக்கு முதலடியை எடுத்து வைத்துள்ளது இவ்வாறான நிலையில் யாழ். மக்கள் இந்த சூழ்நிலையை வரவேற்கின்றனரா?

பதில்: யாழ். மக்கள் அமைதியையே வேண்டுகின்றனர். ஏனெனில் அதிகம் கஷ்டப்படுபவர்கள் தமிழ் மக்கள் தான். புதிய பிரதமரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர் என்னுடன் ஒன்றேமுக்கால் மணி நேரம் பேச்சு நடத்தினார். பிரதி பாதுகாப்பு அமைச்சரும் உடனிருந்தார். பிரதம

### சனியன்று

பேராசிரியர் க. குணரத்தினம் தலைமை தாங்கி நடாத்துவார்.

இதில் முதலாவது அமர்வு காலை 9.00மணிக்கும் இரண்டாவது அமர்வு 11 00 மணிக்கும் மூன்றாவது அமர்வு மாலை 2 00மணிக்கும் நடைபெறவுள்ளது.

ரிடம் எம் மக்களின் கஷ்டத்தை அறிக்கை மூலமாக சமர்ப்பித்தேன். அவர் மிகவும் அதிசயப்பட்டார். சில நிலவரங்கள் அவர் கூட அறியாததாக இருந்தது

கேள்வி: வேறு எந்த அரச அதிபரையும் விட உங்கள் பொறுப்பு முக்கியத்துவமானது. யாழ்ப்பாணம் ஒரு நெருக்கடியான பிரதேசம்- சில இடங்கள் அரச கட்டுப்பாட்டில் உள்ளது. சில இடங்கள் விடுதலைப் புலிகள் வசம் உள்ளன- இச் சூழ்நிலையில் இரு பக்கத்தையும் நீங்கள் எவ்வாறு சமாளித்து வெற்றிகரமாக பணியாற்றுகிறீர்கள் என கூற முடியுமா?

பதில். விடுதலைப் புலிகளின் சில சில அரசியல் குறிக்கோளில் நாம் தலையிடாமல் வேலை செய்யும் போது அவர்கள் பிரச்சினை எதையும் தருவதில்லை. சில இடங்களில் அவர்களைக் கேட்டு நடக்கும் சந்தர்ப்பங்களும் எனக்குண்டு- அச்சமயம் சில வேளை நாம் சொல்வதையும் கேட்டு சில நல்ல தீர்மானங்களை அவர்கள் எமக்கு தந்து உதவுவதால் எனக்கு அப்படி ஏதும் பிரசினையாக இல்லை; ஆனால் இரு பகுதியையும் எப்போதும் திருப்திப்படுத்துவது கடினம் என்பதையும் நான் உணர்கிறேன்;

## மரண அறிவித்தல்

### தம்பு வேலாயுதபிள்ளை

(பதிவாளர் தமிழீழ நீதிமன்றம். சாவகச்சேரி)

குடமியன்வரணியைச்சேர்ந்த தம்பு வேலாயுதபிள்ளை 04-09-94 அன்று காலமானார். அன்னார் வே. தம்பு, காலஞ்சென்ற தம்பு தங்கம்மா ஆகியோரின் மகனும்,

யாழ். ஸ்ரீதரில் தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும் CIRCUS இதனுடன்

தினசரி காலை 10.30, மாலை 6.00

WAY OF THE

யாழ். ஸ்ரீதரில்
தினசரி காலை 10.30, மாலை 6.00
**WAY OF THE DRAGON**
[கராட்டி]

சனி, ஞாயிறு தினங்களில்
பி.ப 2.15 மணிக்கு மட்டும்
**SOCCER WORLD CUP . 1994**
**BRAZIL VS ITALY - FINAL**
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994
பிறேசில் எதிர் - இத்தாலி இறுதி ஆட்டம்

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்
**CIRCUS**
இதனுடன்
**BIG BOSS** படத்திலிருந்து புறூஸ்லீ யின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும்,
**RAMBO** படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.
(சி-10230)

உ
சிவமயம்
யாழ்ப்பாணம் வண்ணை கலட்டி
## அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய
## புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட யாக
# மகா கும்பாபிஷேகம்

09 - 09 - 94 வெள்ளிக்கிழமை அதிகாலை 6 - 05 மணி முதல் காலை 6-20 மணி வரை உள்ள சுப வேளையில் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

பிரதிஷ்டா குரு வேதாகம கிரியைமணி
சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் [ஆலய பிரதம குரு]

**எண்ணெய்க் காப்பு சாத்துதல்:**

08-09-94 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

09-09-94 வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு மகா அபிஷேகம், பூசை, மகேசுவர பூசை [அன்னதானம்] இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு விநாயகர் சதுர்த்தி உற்சவர், வசந்த மண்டப பூசை, சுவாமி வீதி வலம் வருதல்.

இரவு 7 மணிக்கு விசேட இன்னிசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அனைவரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்.

நன்றி

கலட்டி கற்பக விநாயகர்
ஆலய நிர்வாக சபையினர்

(9325)

செலவு எவ்வளவு என அதிகாரிகளை ஆராயும்படி கேட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். விரைவில் வவுனியாவுக்கு மீண்டும் வந்து, சோதனைச் சாவடிகள் முகாம்களைப் பார்வையிடுவதோடு, வடபகுதியிலிருந்து வரும் மக்களைச் சந்திக்கவிருப்பதாகவும் அவர் அப்போது தெரிவித்தார்.

## 139 பட்டதாரி

இதேவேளை பயிற்சி ஆசிரிய நியமனங்கள் கிடைத்தவர்கள் தாம் கடமையை பெறுப்பேற்கவேண்டிய இடங்கள் குறித்து கொழும்பு கல்விச் சேவை குழுவுடன் தொடர்புகொள்ள வேண்டுமென கொள்கை திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

மேற்படி நியமனங்கள் தொடர்பாக யாழ்ப்பாண திட்டமிடல் பணிமனைக்கு கடந்த ஐந்தாம் திகதி கிடைத்த நியமனக் கடிதங்களை யாழ் மாவட்ட பட்டதாரிகளுக்கு உடனடியாக அனுப்பிவிட்டதாக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு வி.செ சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். (சி)

## பேராசிரியர்

09 மாணவர்களுக்கு நடன டிப்ளோமாவும் 02 மாணவர்களுக்கு மிருதங்க டிப்ளோமாவும், 149 மாணவர்களுக்கு விஞ்ஞானமாணியும், 08மாணவர்களுக்கு சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணியும் பட்டங்களாகவழங்கப்படவுள்ளன.

பட்டப்பின் பட்டங்களின் வரிசையில், மறைந்த முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவுக்கு விஞ்ஞான கலாநிதிப் பட்டமும், இருவருக்கு முது விஞ்ஞான மாணிப் பட்டமும், மூவருக்கு முது மெய்யியல் மாணிப் பட்டமும், ஐவருக்கு முது கலை மாணிப் பட்டமும், 102பேருக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும், ஏழு பேருக்கு ஆங்கில மொழி கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமாவும் வழங்கப்படவுள்ளன.

(பா);(தி)

விக்கப்படுகிறது.

## வீரச்சாவு

கும் இடையில் கடந்த 4-ம்திகதி இடம்பெற்ற நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் பாரதி (வீரசேகரம் விசுவையா மட்டக்களப்பு) என்பவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

★ ★

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரிநல்லதண்ணி ஓடைப்பகுதியில் கடந்த29-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை திலக் (த. ஜெயக்குமார் மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இதேவேளை இம் மோதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை எனினும் மோதல் இடம்பெற்ற இடத்தில் உலங்கு வானூர்தி ஒன்று இருதடவைகள் இறங்கி ஏறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரசின்

மான கப்பல் கட்டணம் அறவிடுகின்றது பலதடவைகள் கப்பல் கட்டணம் அறவிடுவதை கைவிடும்படி கோரிய போதிலும் இன்னமும் கைவிடப்படவில்லை.

தற்போது புதிய அரசாங்கத்திடம் எமது இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

சீரான பாதை திறக்கப்படாத நிலையில் வாகனங்கள் மூலம் அத்தியாவசிய பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரமுடியாது இப்பாதை விவகாரமாக இருக்கும் வரையும் கப்பல் கட்டணம் அறவிடப்படும் வரையும் யாழ். மாவட்ட அத்தியாவசிய பொருள் விலையில் பெரிய மாற்றத்தை எதிர்பார்க்கமுடியாது என அவர் குறிப்பிட்டார். (தி, பா)

(பதிவாளர் தமிழீழ நீதிமன்றம். சாவகச்சேரி)
குடமியன்வரணியைச்சேர்ந்த தம்பு வேலாயுதபிள்ளை 04-09-94 அன்று காலமானார். அன்னார் வே. தம்பு, காலஞ்சென்ற தம்பு தங்கம்மா ஆகியோரின் மகனும், பத்மதேவி (ஆனைக்கோட்டை) என்பவரின் அன்புக் கணவரும், செவ்வந்தி, செந்தீபன். செந்ரூபன், செந்தீசன், ஆகியோரின் அன்புத் தந்தையும், சிங்கராசா, ஆ. அன்னம்மா (பாலாவி), க. இலட்சுமிப்பிள்ளை (பளை) விசுவலிங்கம் (பிரான்ஸ்). ச. சின்னக்கிளி (கொடிகாமம்), ம. மங்கையற்கரசி (லிகிதர், பாராளுமன்றம், கொழும்பு), த. முருகமூர்த்தி ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-09-94 வியாழக்கிழமை (இன்று) பி. ப. 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
குடமியன், வரணி,
(9328)
முருகமூர்த்தி
(சகோதரன்)

# மரண அறிவித்தல்

ஆண்டவர் படைப்பு
07-01-1967
●
அநியாய அழிப்பு
18-07-1994



## நீக்கிலஸ் அன்ரன் றெஜினோல்ட்

அலைப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் நீக்கிலஸ் அன்ரன் றெஜினோல்ட் 18-07-94 அன்று சுவிஸில் அகாலமரணமானார். இவரின் இறுதிக் கிரியைகள் 01-09-94இல் சுவிஸில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
158/1, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (9317)
பி. நீக்கிலஸ்
இராஜேந்திரம்
(தந்தை)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.